செ.வெ.எண்:64 நாள்:24.12.2018

**நாகப்பட்டினம் மாவட்டம்**

**கஜா புயலால் பாதிக்கப்பட்ட வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியம் புஷ்பவனம் கிராமத்தில் நடைபெற்று வரும் சீரமைப்புப் பணிகளை**

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியம் புஷ்பவனம் கிராமத்தில் கஜா புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் சீரமைப்புப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ,ப அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவித்ததாவது,

“ நாகப்பட்டினம் மாவட்டத்தில் கஜா புயலால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் சீரமைப்புப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று, தற்போது பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளது. புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அனைத்து மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அனைத்துப் பகுதிகளிலும் தொற்று நோய்கள் பரவாமல் காக்கும் வகையில் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. கிராமப்புறங்களில் மாஸ் கிளினிங் என்னும் முறையில தூய்மைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 98 சதவீதம் மின்பாதை சீரமைப்புப் பணிகள் முடிவுற்று, வீடுகளுக்கு மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது, விவசாய மின் இணைப்புகள் மற்றும் உப்பளங்களுக்கான மின் இணைப்புகள் வழங்கிடும் வகையில் சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நாகப்பட்டினம் மாவட்டம் புஷ்பவனம் கிராமத்தில் ‘‘கஜா’’ புயலின் போது ஏற்பட்ட கடல் சீற்றத்தால் அலைகள் மூலம் கரைப்பகுதிக்கு தள்ளப்பட்ட சேற்றினை அப்புறப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியினை விரைந்து முடித்து, கடற்கரைப் பகுதிகளை பொதுமக்களும், மீனவர்களும் பயன்படுத்தும் வண்ணம் சீரமைத்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கஜா புயலால் ஏற்பட்ட பாதிப்பைத் தொடர்ந்து, புஷ்பவனம் உதவி நடுநிலைப்பள்ளியில் சீரமைப்புப் பணிகள் மற்றும் தூய்மைப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

புயலால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் உள்ள நிலங்களில் அதிகமாக விழுந்துள்ள மரங்களை அகற்றுவது சவாலாக உள்ளது. அதனடிப்படையில் இன்றைய

தினம் புஷ்பவனம் ஊராட்சி, பெத்துக்குட்டித் தெருவில் திருப்பூர் மத்திய அரிமா சங்கம், சுப்ரீம் மொபைல்ஸ் நிறுவனம், பெட்ரோலிய வணிகர்கள் சங்கம் ஆகியவற்றின் சார்பில் 25 நவீன மரம் அறுக்கும் இயந்திரங்களைக் கொண்டு, முதற்கட்டமாக சுமார் 1000 ஏக்கர் பரப்பளவில் புயலால் சேதமடைந்துள்ள மரங்களை வெட்டி அகற்றும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இதுபோன்று சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள தனியார் நிறுவனங்களும், தொண்டு நிறுவனங்களும் முன்வர வேண்டும். மேலும் இப்பணிகளை மேற்கொள்ள பொதுமக்களும் தங்கள் ஒத்துழைப்பினை அளித்திட வேண்டும். குறிப்பாக நாகப்பட்டினம் சி.பி.சி.எல் நிறுவனம் சார்பில் நன்கொடை பெறப்பட்டு, அதன் மூலம் மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்ட பள்ளி வளாகங்கள் சீரமைக்கப்படவுள்ளன.” என தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, வேளாண்மைத்துறை செயற்பொறியாளர் திரு.செல்லக்கண்ணு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மீ.செல்வகுமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.கஸ்தூரி, திரு.தியாகராஜன், வட்டாட்சியர் திரு.இளங்கோவன், மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**